வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பரவக்கல் கிராமத்திலிருந்து பேர்ணாம்பட்டு நகரம் செல்ல சாலையமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 388, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

388—

மாணவர் விடுதி

***21893—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நடுக்கல்லூர் பகுதியில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருநெல்வேலி மாவட்டம், நடுக்கல்லூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி இயங்கி வருகிறது. இவ்விடுதி நடுக்கல்லூரிலிருந்து விடுதி வசதி கோரும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. எனவே, நடுக்கல்லூர் பகுதியிலே புதிய பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி துவங்க

2014 ஆகஸ்ட் 8]

வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத் தமிழ் மண்ணில் வாழ்விற்கு வழிகாட்ட ஆளப் பிறந்திட்ட அருந்தவமே, (மேசையைத் தட்டும் ஒலி), காலமும், கடவுளும் கனிவோடு அடையாளம் காட்டிய கலங்கரை விளக்கமே, திரும்பும் திசையெல்லாம் தேமதுரத் தமிழோசை திசைகாட்டியானவரே, திராவிடத்து அரசியலுக்கு விசையூட்டி, திக்கெட்டும் வெற்றிகளைக் குவிப்பவரே, இலை துளிர்த்ததால் (மேசையைத் தட்டும் ஒலி) இலை துளிர்த்ததால் ஏழையெளியோரின் உலை கொதித்தது; பசிப் பிணி போக்க வந்த பாசப் பெட்டகமே, மண் மணக்கும் தமிழகத்தின் மகிழ்ச்சிக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்கின்ற எங்களது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பூ மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேட்டையிலே ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்ட இடம், அந்த இடத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இடம், கல்லூர். அங்கே 986 மாணவர்களும், அருகிலுள்ள சுத்தமல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் 486 மாணவர்களும் படிக்கின்ற காரணத்தாலும், இங்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களின் எண்ணிக்கை 485-க்கும் மேலாக இருக்கின்ற காரணத்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று அங்கு விடுதியைக் கட்டித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் கட்டுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 389, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

389—

ஆரம்ப சுகாதார நிலையம்

*635—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி, செட்டிகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அறிவுரையின்பேரில், 10-4-2013 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டு, தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.